# Kanchipuram DT

B

## முதல் திருப்புதல் தேர்வு - 2024

## பதினொன்றாம் வகுப்பு

நேரம் : 3.00 மணி தமிழ் மதிப்பெண்கள் : 90

பகுதி - I

அனைத்து வினாக்களுக்கும் விடையளி:- 14×1=14

1) 'பறவைகள் ஒருவேளை தூங்கப் போயிருக்கலாம்' என்ற மொழிபெயர்ப்பு நூலுக்காக சாகித்திய அகாடமி விருது பெற்றவர் யார்?
   அ) இந்திரன் ஆ) சங்கர் ஜெயராமன்
   இ) வெ. ஸ்ரீராம் ஈ) ஆ.இரா. வேங்கடாசலபதி

2) தொல்காப்பியர் குறிப்பிடும் புலன் என்னும் இலக்கிய வகையைச் சார்ந்தது எது?
   அ) குறவஞ்சி ஆ) பள்ளு இ) தூது ஈ) உலா

3) 'கொல்லேற்றுக் கோடஞ்சுவானை மறுமையும் புல்லாளே ஆயமகள்' என்று குறிப்பிடும் இலக்கியம்
   அ) பதிற்றுப்பத்து ஆ) பரிபாடல் இ) கலித்தொகை ஈ) நற்றிணை

4) ஒப்புரவு என்பதன் பொருள்
   அ) அடக்கமுடையது ஆ) பண்புடையது
   இ) ஊருக்கு உதவுவது ஈ) செல்வமுடையது

5) சமயநூலும் தத்துவநூலும் கற்பிப்போர் ________
   அ) ஆசிரியர் ஆ) குரவர் இ) கணக்காயர் ஈ) உபாத்தியாயர்

6) வறண்ட வாழ்வு துளிர்க்க
   மழைபோல் வந்தாய் நீ! இக்கவிதையில் எவ்வகை உவமை பயின்று வந்துள்ளது?
   அ) வினை ஆ) பயன் இ) மெய் ஈ) உரு

7) ஒரு வராகன் என்பது
   அ) 12 பணம் ஆ) 24 பணம் இ) 36 பணம் ஈ) 48 பணம்

8) முல்லைத் திணைக்குரிய பண் எது?
   அ) குறிஞ்சிப்பண் ஆ) சாதாரிப்பண் இ) செவ்வழிப்பண் ஈ) பஞ்சுரப்பண்

9) விளம் முன் நிரை என்பது ________
   அ) இயற்சீர் வெண்டளை ஆ) வெண்சீர் வெண்டளை
   இ) நேரொன்றாசிரியத்தளை ஈ) நிரையொன்றாசிரியத்தளை

10) மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து ________ நினை
   அ) முகக்குறிப்பை அறிந்தவரை ஆ) மறதியால் கெட்டவர்களை
   இ) எண்ணியதை எண்ணியவரை ஈ) சொல்லேர் உழவரை

11) இராசசிம்மேச்சுரம் என்றழைக்கப்படும் கோயில் எது?
   அ) காஞ்சிபுரம் கைலாசநாதர் கோயில் ஆ) பனைமலை கோயில்
   இ) மகாபலிபுரம் கடற்கரை கோயில் ஈ) தஞ்சை பெரியகோயில்

www.Padasalai.Net www.TrbTnpsc.com



12) அயன் என்றழைக்கப்படும் கடவுள் ______

அ) பிரமன் ஆ) விஷ்ணு இ) சிவன் ஈ) முருகன்

13) அப்துல்ரகுமானின் சாகித்திய அகாதெமி விருது பெற்ற நூல்

அ) பால்வீதி ஆ) ஆலாபனை இ) நேயர் விருப்பம் ஈ) சுட்டு விரல்

14) மனோன்மணீயத்தில் உள்ள கிளைக்கதை

அ) சிவகாமியின் சபதம் ஆ) இராவண காவியம்

இ) பாஞ்சாலி சபதம் ஈ) சிவகாமியின் சரிதம்

பகுதி - II

பிரிவு - 1

எவையேனும் மூன்றனுக்கு விடை தருக:- 3×2=6

15) சீர்தூக்கி ஆராய வேண்டிய ஆற்றல்கள் யாவை?

16) தொடர் அமைத்து எழுதுக. அன்றொரு நாள், நிழலிலிருந்து

17) பாயிரம் - பற்றி நீங்கள் அறியும் கருத்து யாது?

18) ஒழுக்கமும், பொறையும் உனைப்போல யார்க்குள - இவ்வடிகள் எதனைக் குறிக்கிறது.

பிரிவு - 2

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக:- 2×2=4

19) கொற்கை, வஞ்சி, தொண்டி வளாகம் (KVT Complex) குறிப்பு வரைக.

20) ஆனந்தரங்கனின் வருணனைத்திறனுக்கு ஓர் எடுத்துக்காட்டு தருக?

21) 'நாழிக்குள் திணிக்கும் மருந்துபோல' என்னும் உவமையை ஜீவானந்தம் பேச்சுடன் ஒப்பிடுக.

பிரிவு - 3

எவையேனும் ஏழனுக்கு விடை தருக. 7×2=14

22) பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக

அ) காலங்காத்தால எந்திரிச்சுப் படிச்சா ஒரு தெளிவு கெடைக்கும்.

ஆ) முயற்சி செஞ்சா அதுக்கேத்த பலன் வராம போவாது.

23) தொடரில் உள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி இரண்டு சொற்றொடர்களாக்குக

பள்ளிக்கூடம் எல்லாம் தருபவை ஒவ்வொரு கலைகள் குழந்தையும் போக வேண்டும் மகிழ்ச்சி

24) மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.

கலை, களை, கழை

25) வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.

தமிழர் ஆற்று தண்ணீரை தேக்கி சேமித்து கால்வாய் வெட்டிப் பாசனம் செய்தனர்

26) பகுபத உறுப்பிலக்கணம் தருக.

அ) வாழ்வான் ஆ) ஆழ்க

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



27) இலக்கணக் குறிப்பு தருக.

அ) செங்கயல் ஆ) மாநகர்

28) புணர்ச்சி விதி கூறுக.

அ) அரும்பொருள் ஆ) மாசற்றார்

29) சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க

அ) அறிவில்லாதவன் ஆ) கால்நடை

30) மரபுச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.

அ) முதலைக் கண்ணீர் ஆ) மதில்மேல் பூனை

பகுதி - III

பிரிவு - 1

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக:- 2×4=8

31) ஐந்து வேளாண் மந்திரங்கள் யாவை?

32) தாமஸிகம் என்றால் என்ன?

33) தமிழ் இலக்கியங்களில் கல்வி குறித்து நீங்கள் அறிந்த செய்திகளை அட்டவணைப்படுத்துக.

34) ஃபிரெஸ்கோ ஓவியங்கள், கற்றளிக் கோவில்கள் குறித்து நீவிர் அறிவன யாவை?

பிரிவு - 2

எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடையளிக்கவும். 2×4=8

35) சு. வில்வரத்தினம் பாடத்தான் வேண்டும் என எவற்றைக் குறிப்பிடுகிறார்?

36) "உயர்தமிழை உயிரென்று போற்றுமின்கள் - இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக.

37) தமிழ்ப் பண்பாட்டின் அடையாளம் காவடிச்சிந்து என்பதை விளக்குக.

38) உணவும் உறக்கமும் அணில் கனவாம், உங்கள் கனவை உங்கள் சொற்களில் விளக்குக.

பிரிவு - 3

எவையேனும் மூன்றனுக்கு விடை தருக:- 3×4=12

39) இளைதாக முள்மரம் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த இடத்து - இக்குறட்பாவில் பயின்றுவரும் அணியை விளக்குக.

(அல்லது)

சொற்பொருள் பின்வருநிலையணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

40) பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் ஒன்றனுக்கு கவிதை எழுதுக.
இயற்கை (அ) அன்னை

41) பின்வரும் பாடலின் மையக்கருத்தை எழுதி ஏற்புடைய நயங்கள் மூன்றினை எழுதுக.

"தண்டலை மயில்கள் ஆட, தாமரை விளக்கம் தாங்க
கொண்டல்கள் முடிவின் ஏங்க, குவளைகண் விழித்து நோக்க
தெண்திரை எழினி காட்ட, தேம்பிழி மகர யாழின்
வண்டுகள் இனிது பாட, மருதம் வீற்றிருக்கும் மாதோ" - கம்பர்

www.Padasalai.Net

www.Padasalai.Net www.TrbTnpsc.com



42) தமிழாக்கம் தருக.

அ) The pen is mightier than the sword.

ஆ) Work while you work and play while you play.

இ) Education is the most powerful weapon, which you can use to change the world.

ஈ) No body can hurt me without my permission

43) புதிர்களுக்கான விடைகளைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

அ) எலியும் நுழையும்; எழிலரசி கையும் நுழையும் ________

ஆ) பூவின் உறுப்பும் நானே; புன்னகையின் பிறப்பிடமும் நானே ________

இ) கண்ணிலும் எழுதலாம்; வெண்தாளிலும் எழுதலாம் ________

ஈ) அடிக்கவும் செய்யலாம்; கோடைக்குக் கூழாகவும் குடிக்கலாம் ________

(மதி, மை, கம்பு, வளை)

## பகுதி - IV

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. 3×6=18

44) அ) அடக்கமுடைமை ஒருவரை வாழ்வினில். உயர்த்தும் இக்கூற்றை முப்பால் வழி விளக்குக?

(அல்லது)

ஆ) தலைவியின் இல்லற பாங்கினைப் பற்றி செவிலித்தாய் நற்றாயிடம் வியந்து கூறுவன யாவை?

45) அ) கல்லும் கதை சொல்லும் என்னும் தொடர் தஞ்சைப் பெரிய கோயிலுக்கு பொருந்துவதை விளக்கி எழுதுக?

(அல்லது)

ஆ) இயற்கையோடு இயைந்து வாழ்ந்த தமிழர்களின் இருப்பிடப் பெயர்களும் இயற்கையோடு இயைந்தே இருந்ததை கூற்றினை மெய்ப்பிக்க

46) அ) யானை டாக்டர் கதை வாயிலாக - இயற்கை உயிரினப் பாதுகாப்பு ஆகியவைக் குறித்து நீவிர் அறிந்தவற்றை தொகுத்து எழுதுக.

(அல்லது)

ஆ) சிந்தனைப் பட்டிமன்றத்தின் நிகழ்வுகளைச் சுவை குன்றாமல் தொகுத்து எழுதுக.

## பகுதி - V

அடிபிறழாமல் செய்யுள் வடிவில் தருக. 4+2=6

47) அ) 'சிற்றூரும்' எனத் தொடங்கும் புரட்சிக்கவி பாடலை அடிமாறாமல் எழுதுக?

ஆ) "கெடும்" என முடியும் குறளினை எழுதுக.

****/****

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com